J/Valvai Mahalir Maha Vidyalayam
VALVETTITURAI

# இந்து இளைஞன்

# The YOUNG HINDU

JANUARY - 1964

மலர் 3 | சோபகிருது ஆண்டு மார்கழித் திங்கள் | இதழ் 12



ஆண்டவன் சேவைக்காக
தமது முதன் மந்திரிப் பதவியையே துறந்த
**மாணிக்கவாசக சுவாமிகள்**

| தனிப் பிரதி | சந்தா அனுப்பவேண்டிய முகவரி | வருடச் சந்தா |
| --- | --- | --- |
| | ஆசிரியர் இந்து இளைஞன், | |
| சதம் 25 | 221, செட்டியார் தெரு, கொழும்பு-11. | ரூ. 2.50 |

கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தின் திங்கள் வெளியீடு

# Towards Lanka's Progress

## NOW AVAILABLE

Superior

**COTTON SCREEN PRINTED SAREES**

* AS GOOD AS THE IMPORTED
* PLEASING SHADES & DESIGNS
* SUPERIOR COTTON VOILES

*Available at all good shops*

Processed & Printed by:

## Ceylon Textile Hand Printing Industries,

124, BANKSHALL STREET,
COLOMBO - 11.

*Telephone:* 4562

269/ ...
Valvai Manavar Sabha Vidyalayam
VALVETTITURAI.
28

# குருமணிமாலை

[செல்வி செல்வநாயகம் சின்னையா]

அன்னையாய் அமுதமூட்டி அன்பினால் அறிவு தீட்டி
என்னைநான் அறியும் வண்ணம் என்னுளே உணர்வுமூட்டி
பின்னையென் பீடையெல்லாம் பிறிதுமற்றகல ஓட்டி
மன்னுசீர் வாழ்வு தந்த மாதவக் கொழுந்தே போற்றி

*

அன்பினுக்கணியுமாகி அளப்பரும் ஆற்றல் கொண்டு
என்னையும் உருக்கும் வண்ணம் என்னுளே புகுந்து நின்று
மன்பதை உய்யுமாறு மாதவப் பெருமை காட்டி
என்பெரும் குறை தீர்த்தாண்ட என்னுயிர்க்குயிரே போற்றி

*

அனாதையாய் நாதி யற்று ஆதர வற்று மற்று
வினவுவா ரெவருமற்று விசனமுற் றிருந்த போதில்
அநாதியாம் அமல னெந்தை அண்ணல்சீர் நாம மோதி
வினவுறு விடையாய் வந்த வித்தக மணியே போற்றி

*

இன்மையால் இன்ன லுற்று இருளுற்ற வாழ்வு தன்னில்
பன்முறை பரித வித்துப் பாவியேன் அழுத போது
'இன்னலுக்(கு) இன்மையுண்டு; இருளுக்கு முடிவுமுண்டு
என்னினி வருந்தல்?' என்று தேற்றிய எழிலே! போற்றி

*

தந்தையும் தாயு மாகி தனிஅரண் தானே ஆகி
சிந்தையில் தெளிவு தந்து திரு நெறி வகுத்துக் காட்டி
அந்தமில் அன்பு தந்து அத்துடன் அருளும் கூட்டி
முந்தையோர் முறையில் நிற்கும் முற்றறி குன்றே போற்றி

*

தண்ணெனப் பொங்கிப் பாயும் தாய்மையின் உருவமாகி
விண்ணுற ஓங்கி நிற்கும் வெற்பினில் விளக்கு மாகி
மண்ணில் நல்வாழ்வு நல்கும் மாண்பெலாம் அமைய என்றன்
கண்ணினுள் மணியாய் நிற்கும் கற்பகத் தருவே போற்றி

*

தாய்மையின் தயையுங் கண்டேன் தஞ்சம் நான் கண்டு கொண்டேன்
தூய்மையின் தோற்றம் கண்டேன் துயரறு வதையுங் கண்டேன்
வாய்மையின் வளப்பம் கண்டேன் வையத்து வாழ்வும் பெற்றேன்
தூயமா முனிவன் தந்த தூமணி விளக்கே போற்றி

*

திக்கற்றோர் துணையு மாகி திருவற்றோர் திருவு மாகி
பக்கஞ்சேர் பலமு மாகி பணிவுக்கோர் பரிசு மாகி
துக்கஞ்சேர் வாழ்வு தன்னில் துணிவுக்கோர் துணிவு மாகி
சிக்கல் தீர்த்(து) என்னை யாண்ட சித்தன குருவே போற்றி

*

இந்திர போகம் வேண்டேன் இனியுமற் றெதுவும் வேண்டேன்
சந்திர லோக மாளும் சங்கையும் வேண்டேன் அன்னாய்!
அந்தியும் பகலும் நின்றன் ஆணையென் சிரமேற் கொண்டு
புந்தியும் செயலுமொன்றும் புரி பணி வேண்டுவேனே

# மணிவாசகரின் அன்பு நிலை

[செல்வி. செ. சின்னையா]

அழுதடியடைந்த அன்பராகிய மணிவாசகர், இறைவன் மேற்கொண்ட ஆரா அன்பினால், ஆவியோடாக்கை ஆனந்தமாய்க் கசிந்துருகப் பெற்றுச் சிவத்துடன் இரண்டறக் கலந்தவர். வாக்கிறந்த சதம் மயிர்க்காறோறும் தேக்கிடப் பெற்றவர். அற்புதமான அமுத தாரைகள் எற்புத்துளை தொறும் ஏற்றிடப் பெற்றவர். அவரது அன்பின் தோற்றமும், வளர்ச்சியும், முதிர்ச்சியும் அவரருளிய மணிவாசகமாகிய திருவாசகத்தாலும், திருக்கோவையாராலும் அறியக் கிடக்கின்றது. தக்க சமயமதில், தாயொடு தான்படும் துக்க சாகரத்தினின்றும், இளமுலை மாதர் தம் கூர்த்த நயனக் கொள்ளையினின்றும், மதயானையொத்த அவாவினின்றும், கல்வியென்னும் பல்கடலினின்றும், செல்வம் என்னும் அல்லலினின்றும், நல்குரவென்னும் தொல்விடத்தினின்றும் புல் வரம்பாய பல துறைகளினின்றும் தப்பித்து, தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி, அப்பெரும் பொருளை நாடத் தொடங்கினார். அவருக்கு இறை நாட்டம் தீவிரமாக ஏற்பட்டதும் சற்குரு தரிசனம் கிடைத்தது. அந்தக் கணமே, இறைவன் மேல் இடையறாப் பேரன்பு பெருகத் தொடங்கிற்று. அப் பேரன்பு மேலீட்டினால் அவர்பட்ட அவதியை அவரே கூறுகின்றார்.

"அறைகூவி ஆட்கொண்டருளி
மறையோர் கோலங் காட்டியருளலும்
உளையா அன்பு என்புருக ஓலமிட்டு
அலைகடல் திரையின் ஆர்த்தார்த் தோங்கித்
தலைதடுமாறா வீழ்ந்து புரண்டலறிப்
பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவும் கேட்டவர் வியப்பவும்"

பெருமதங் கொண்ட மதயானை போல, மிகுதிப்பட்ட இன்ப அன்பைத் தாங்க முடியாது தவித்தார். இன்பவேதனை ஒருவாறு அடங்கப் பெற்றதும் இறைவன் தனது அடியவருடன் கூட்டாது, இவரைத் தில்லைக்கு வரச்சொல்லிவிட்டுச் சென்றமை, புலனாயிற்று. வலிய வந்தாட்கொண்ட கருணை வள்ளலின் பெருமையை நினைந்து இன்பக் கிறுக்கேறி இறுமாந்திருந்த தன் சிறுமையை நினைந்து அழுதார். நாயிற் கடைப்பட்ட தன்னைத் தடுத்தாட் கொண்டமையினாலேயே இறைவனின் பேரன்பு வெளிப்படலாயிற்று என்றும் இறைவன் தன்னை விட்டுச் சென்றமையினாலே தனது அன்பின்மை வெளிப்பட்டது என்றும் எண்ணி நெஞ்சம் நெக்குருகி அழுதார். "உன்றன் வார்கழற்கன்பு நிரந்தரமாய் அருளாய் நின்னையேத்த முழுவதுமே" என்று வேண்டியழுதார். திருவாசகம் முழுவதிலும், மணிவாசகரின் அன்பு படிப்படியாக வளர்தலையே காண முடிகிறது.

குருவடிவாய் வந்து இறைவன் இவரை ஆட்கொண்ட அன்றே அவனிடம் ஆரா அன்பு பூண்டார். ஆனால் அந்த அன்பில் அவர் பூரணத்துவத்தைக் காணவில்லை. சில சமயங்களில் தன் அன்பைத் தானே சந்தேகிக்கிறார். "ஆடகச் சீர் மணிக் குன்றே இடையறா அன்புனக்கென் ஊடகத்தே நின்றுருகத் தந்தருள் எம்முடையானே" என்று வேண்டுகிறார். உற்றாரை வேண்டாதவர், ஊர் வேண்டாதவர், கற்றாரை வேண்டாதவர், கற்பனவும் வேண்டாதவர் இறைவனின் பாதத்தை நினைந்து கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுகிறார். இறைவன்பால் தனக்கிருந்த அன்பு கண்ணப்பன் ஒப்பதோர், அன்பாக இருக்கவில்லையென்று அழுகின்றார். கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை

J/Valvai Mahalir Maha Vidyalayam
VALVETTITURAI

எவ்வாறெனின், மணிவாசகருக்கு நெஞ்சமும், கண்களும் இன்றியமையாதனவாய் இருந்தன.

'உள்ளந்தாள் நின்று உச்சியளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாங்
கண்ணிணையும் மரமாம் தீவினையி னேற்கே'

என்று உடம்பெல்லாங் கண் வேண்டி யழுதவர். தனக்கிருந்த இரண்டே இரண்டு கண்களையும், நினைத்த மாத்திரத்தில் கண்ணப்பனைப் போன்று தோண்டியப்ப முற்பட்டு இருப்பாரா? மேலும், யானே பொய் என் நெஞ்சம் பொய் என் அன்பும் பொய், ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே'' என்றவர் கண்ணில்லாவிடில் எப்படி அழ முடியும்? தன் கண்ணிணையை இறைவன் திருப்பாதப் போதுக்காக்கியவர் எப்படி அவற்றை அவற்றினின்றும் எடுக்க முடியும்? ஆகவே கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை தெளிவாயிற்று. தனது நெஞ்சைத் தானே கடிந்து கொள்கிறார்.

'பிணநெஞ்சே! கூத்துடையான் கழற்கு அன்பிலை, (ஆனதினால்) ஆடுகின்றிலை, என்புருகிப் பாடுகின்றிலை, பதைப்பதும் செய்கிலை, பணிகிலை, பாத மலர் சூடுகின்றிலை, சூட்டுகின்றதுமிலை, தேடுகின்றிலை, தெருவு தோறலறிலை, யான் என் செய்வேன்''

என்று புலம்புகிறார். இங்கும் மணிவாசகரின் அன்பின் நிறைவின்மையையே காண்கின்றோம்—அவரின் அன்பு படிப்படியாக வளர்ந்து கொண்டு போகிறது. அது வளர்ச்சிக் கிரமத்தில் இருக்கும்போது நிறைவுற்றதாக இருக்கமுடியாது. ஆகவே மணிவாசகர் திருப்தியற்று ''மெய்கலந்த அன்பரன்பு எனக்குமாக வேண்டுமே'' என்று இறைவனை வேண்டுகிறார். குழந்தை கையிலுள்ள பொற்கிண்ணம் போன்று, இறைவன் தன்னை வந்தாண்டதின் அருமை தெரியாதிருந்தமைக்கு வருந்துகிறார்.

நீத்தல் விண்ணப்பத்தில் தன் துன்பம் எல்லாம் கூறித் தன்னைக் கைவிட வேண்டாமென்று விண்ணப்பிக்கின்றார். கருணையினால் தன்னைக் கலந் தாண்டதாகக் கூறி, அக்கருணையின் பேரில் தன்னைத் தாங்கிக் கொள்ளுமாறு பன்முறை வேண்டுகிறார். நயமாகக் கேட்டும் இறைவன் அருளாமை கண்டு இறைவனையே பயமுறுத்துகின்றார். ஊரவர் எல்லோரும் சிரிக்கும்படி செய்வேன் என்று கறுவுகிறார். 'என்னை மிக்கார் ஆர் அடியான் என்னின் உத்தரகோச மங்கைக்கரசின் சீரடியார் அடியானென்று நின்னைச் சிரிப்பிப்பனே' என்கின்றார். இத்துடன் நிற்கவில்லை—செய்யத்தகாதன வெல்லாம் செய்யும் பைத்தியக்காரனென்று கூட இறைவனை ஏசுகின்றார்.

'சிரிப்பிப்பன், சீறும் பிழைப்பைத் தொம்மையுமுழ் ஈசற் கென்று
விரிப்பிப்பன், என்னை விடுதிகண்டாய் விடின் வெங்கரியின்
உரிப்பிச்சன், தோலுடைப் பிச்சன், நஞ்சுண் பிச்சன் ஊர்ச்சுடு காட்
டெரிப்பிச்சன் என்னையும் ஆளுடைப் பிச்சனென்று ஏசுவனே'

இது அன்பின் உரிமை பற்றி வந்த சீற்றமாகும். அன்பின் வளர்ச்சியில் இது உயர்ந்த நிலையென்று கொள்ளலாம். பயத்துடன் அன்பு செய்வதிலும், உரிமையுடன் அன்பு செய்தலே அன்பின் வளர்ச்சியை யெடுத்துக் காட்டுகின்றது.

திருவெம்பாவையில் அன்பின் வளர்ச்சி இன்னும் ஒருபடி உயர்ந்திருத்தலைக் காணலாம். சிவானந்தத்தை ஏனைய அடியாருடன் கூடி, மானசீகமாக அனுபவிக்கின்றார். இறைவனை ஏச உரிமை எடுத்துக் கொண்டவர் இன்னும் ஒரு படி மேலே போய், இறைவன் அடியாருடன் சேர்ந்து, மானசீகமாகச்

சிவானந்த வெள்ளத்தில் மூழ்கித் திளைக்கிறார். இறைவன் அடியார்களுடன் உரிமை கொண்டாட வேண்டுமென்னில், இறையன்பின் வளர்ச்சி கூடிய நிலையில் இருந்திருக்க வேண்டும்.

‘திருக்கோத்தும்பி’ என்ற பகுதியில் அரச வண்டை விளித்து, இறைவனின் குணுகுணங்களையும், தன்னை வந்தாண்டு கொண்ட திறத்தையும் கூறி, அவனது சேவேறு சேவடிக்கே சென்றூது எனப் பணிக்கின்றார். அன்பின் திறத்தை அரச வண்டுக்கு அழகாக எடுத்துரைக்கின்றார்.

தினைத்துணையுள்ளதோர் பூவினிற்
றேனுண்ணாதே
நினைத்தொறும் காண்டொறும் பேசுந்
தொறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத்தேன்
சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய்
கோத்தும்பி

இது அன்பு வளர்ச்சியின் இன்னொரு உயர்ந்த நிலையைக் காட்டுகின்றது. அறிவு வளர வளர, அறியாமை அதிகமாகத் தென்படுவது போன்று அன்பு வளர வளர அன்பின்மை போன்று தோன்றுகிறது மணிவாசகருக்கு. ஆகவே ‘நான் தனக்கன்பின்மை நானுந் தானும் அறிவோம்; தானென்னை ஆட்கொண்டது எல்லாரும் தாமறிவார்” என்று கூறுகின்றார். அருமையாகப் பிறந்த குழந்தைக்கு பெற்றோரன்பு மிகுதியினால் எத்தனையோ செல்லப் பெயரிட்டு அழைக்கின்றனர். மணிவாசகரும் அன்பு மிகுதியால்

‘ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லார்க்
காயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம்
கொட்டாமோ’

என்று பாடுகிறார். ஊழிக்காலமேற்படினும், தான் அழிதலில்லா நிற்கும் இறைவனுக்கு, ‘ஊன் கெட்டு, உயிர் கெட்டு உணர்வு கெட்டு, என்னுள்ளமும் போய் நான் கெட்டவாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ’ என்று கூறுவதிலேயே அவரது அன்பின் தன்மையையும் அதன் வளர்ச்சியையும் காண முடிகிறது.

அன்பின் பெருக்கால் தனது அன்பனை உடனே சேர வேண்டும் என்ற ஆவல் கொழுந்து விட்டெரிகிறது, மணிவாசகருக்கு. பிரிவுத் துயரம் பொறுக்கலாற்றாது கதறுகின்றார். ‘ஒன்றும் நீயல்லை, அன்றி ஒன்றில்லை, யாருன்னை அறியகிற்பாரே’ என்று ஏங்குகின்றார். தனக்காரும் உறவில்லை, ஆரும் அயலில்லை, ஆகையால் இறைவனே வந்து ஆனந்தம் தரும்படி வேண்டுகின்றார். ‘உன்னைத் தந்து என்னைக் கொண்டாய். நான் அந்தமில்லானந்தம் பெற்றேன். நீ ஒன்றும் பெறவில்லையே’ என்று அவனுக்குக் கைமாறு கொடுக்க முடியாத தனது கையறு நிலையை நினைந்தழுதார். அன்பு மேலிட மேலிடக் கண்ணீரும் கூடிக் கொண்டே போகிறது. தன் உடலைச் சிதைக்க முடியவில்லையே என்று பொருமி அழுகின்றார். இறைவன் கழலிணை பிரிந்த அன்றே, தான் செத்திருக்க வேண்டும். அதுவும் முடியாமைக்கு வருந்துகின்றார். மணிவாசகரின் அன்பின் தீவிரத்தை இங்கே காணக் கூடியதாக இருக்கிறது. இறைவனை மானசீகமாகக் கூடி, அநுபவிக்கின்றார். அது புற வாழ்க்கையிலில்லாத போது “வாழ்கிலேன் கண்டாய் வருக என்றருள் புரிவாயே” என்று கெஞ்சுகின்றார்.

பிடித்த பத்தில் மணிவாசகரது அன்பு உறுதி பெறுவதைக் காணக் கூடியதாக விருக்கிறது. தாயினதும் சேயினதும் இறுக்கமான பிணைப்பு இங்கே வந்து விட்டது. குழந்தைக்குத் தாய் அன்னமூட்டுகிறாள். குழந்தை ஓடித் திரிகிறது. தாய் அதைத் தேடிப் பின் தொடருகிறாள். குழந்தை அவளுக்குப் பின்னால் வந்து அவளை இறுகப் பற்றிக் கொண்டு ‘நான் பிடித்து விட்டேன், இனி எங்கே நீங்கள் போக முடியும்?’ என்று கேட்கிறது. அது

போல மணிவாசகரிடம் இறைவன் பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து வந்து, ஆனந்தமாய தேனினைச் சொரிந்து, அவருக்குப் பின்னாலேயே சுற்றித் திரிந்தார். மணிவாசகரும் இறைவனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்துவிட்டார். ஆகவே மணிவாசகரை விட்டு விட்டு இறைவன் போக முடியாது.

திருவாசகத்தில் இப்படி வளர்ச்சியடைந்த அன்பு திருக்கோவையாரில் முதிர்ச்சியடைந்து பூரணமுற்று இருக்கின்றது. இறைவனிடம், மணிவாசகர் கொண்ட எல்லையற்ற பக்தியின் முதிர்ச்சியைத் திருக்கோவையாரிற் காணலாம். அழுதழுது இறைவனடியை அடைந்தபின், உலகத்தவருக்கும், அவ்வன்பின் திறத்தை எடுத்துக் காட்டும் பொருட்டுத் திருக்கோவையாரைப் பாடினார் போலும். உலகியற் காதலின்பத்தைக் கூறும் அகப் பொருளிலக்கியமாகத் திருக்கோவையார் அமைந்து இருக்கிறது. அகப் பொருளிலக்கியத் துறையில் மிகவும் உயர்ந்த இடத்தை வகிப்பது சங்க இலக்கியமே. அவற்றுடன் திருக்கோவையாரை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, திருக்கோவையார் சங்க காலம் அகப்பொருளிலக்கியத்தை விஞ்சி நிற்கின்றது. உதாரணமாக

''யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயர் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே''

என்ற குறுந்தொகைச் செய்யுளையும் திருக்கோவையாரிலுள்ள

''கூம்பலங் கைத்தல தன்பெறேன் பூடுருக்கக் குனிக்கும்
பாம்பலங் காரப் பரன்தில்லை யம்பலம் பாடலரிற்
றேம்பலஞ் சிற்றிடை யீங்கிவ ளீங்கனி வாய்கமழு
மாம்பலம் போதுள வோவழி காணும் மகன்பனையே''

என்ற செய்யுளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது உணர்ச்சியின் உத்வேகம் திருக்கோவையாரில் விஞ்சி நிற்பதைக் காணலாம். ''செம்புலப் பெயர் நீர் போல'' (செம்புலத்தில் பெய்யப்பட்ட நீர் அதனுடன் ஒன்றாகி, அம்மண்ணின் நிறத்தையும் தனதாக்கி நின்றது போல) அன்புடை நெஞ்சங்கள் தாமே கலந்தன என்ற கூற்றுக்கும் 'தன்னை வணங்கு மன்பர் என்பும் உள்ளுருகக் கூத்தாடுகின்ற பாம்பலங்காரப் பரனது தில்லையம்பலம் பாடாதவர் போன்று தேம்பி நிற்கும் சிற்றிடையுடைய தலைமகளது கனிவாய் போல, நறுமணங் கமழும் ஆம்பற் பூக்களுமுண்டோ? உண்டாயின், வண்டுகளே சொல்லுங்கள்' என்ற கூற்றுக்குப் பொருளொன்றாயினும் உணர்ச்சி வேகத்திலும் சொல்லாட்சியிலும், ஓசையிலும் வேறுபட்டிருத்தலைக் காட்டுகின்றது. தான் அனுபவித்த பேரின்பத்தை, உலக மக்களுக்கு அவர்களனுபவிக்கும் சிற்றின்பத்தினூடாகக் காட்ட முற்பட்டார். அவர் காட்டிய இன்பத்தில் அவர் அனுபவித்த பூரணத்தின் பொலிவும் அவரது அன்பின் முதிர்ச்சியும் தெரிகின்றது.

ஒத்த உருவும், திருவும், குலமும், குணமும், குறியும் கொண்ட தலைவன் தலைவியரிடையே, காதல் நிகழ்ச்சி நடைபெறுகின்றது. மணிவாசகர் தான் தலைவனாகவும் இறைவனைத் தலைவியாகவும், பின் தான் தலைவியாகவும் இறைவன் தலைவனாகவும் ஒத்த அன்பால், தானும் இறைவனும் தரத்தால் வேறுபடவில்லை என்பதைத் திருக்கோவையாரிற் காட்டியிருக்கிறார். திருவாசகத்திற் தனது தகுதியின்மையைப் பன்முறை கூறியவர் திருக்கோவையாரில் அப்படியொன்றும் கூறாது தன் அனுபவத்தையும் இறைவனின் குண குணங்களையும் வேதார்த்தம் தொனிக்கக் கூறுகிறார். அன்பின் முதிர்ச்சியிலேயே உறுதிப்பாடும், சமபாவ

னையும் தோன்றுகிறது. தலைவன் தலைவியைப் பற்றிக் கூறும்போது "சொற்பாலமுது இவள் யான் சுவை' என்று இருவரும் ஒன்றாய தன்மையைக் கூறுகின்றார். இரண்டும் ஒன்றாயினும், இரண்டும் வெவ்வேறாக இருந்தாற்றான் இரண்டும் சேரும் இன்பத்தை அனுபவிக்கலாம். ஆகையால் "நான் இவளாம் பொற்பு யாரறிவார்" என்று தலைமகன் வியக்கின்றான். இதை மணிவாசகருக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பாக எடுத்தால் திருவாசகத்தில் இறைவனையடையக் கதறித் துடித்தவர் அவனையடைந்தவுடன் அவனுடன் ஒன்றாமல் ஒன்றியனுபவித்த சுகத்தைத்தான் திருக்கோவையாரில் கூறினார் என்றும் கொள்ளலாம்.

காதலுறவில் ஏற்படும் எந்த நிகழ்ச்சிக்கும் அதாவது புணர்தல், பிரிதல் பின் உடல் சேரல் முதலிய எல்லா நிகழ்ச்சிகளிலும் மேலெழுந்த வாரியான உணர்ச்சி இன்பம் துன்பம் என்று வேறுபடும். ஆனால் அடிப்படையுணர்ச்சி அன்புணர்ச்சியே. அன்புணர்ச்சி எந்த நிலையிலும்இன்பஉணர்ச்சியாகவே இருக்கிறது. முதிர்ச்சியடைந்த பூரண அன்புதான் எந்த நிலையிலும் ஒரு தன்மையதாய் இருக்கும். மணிவாசகரின் அன்பின் முதிர்ச்சியின் பூரண நிலையைத் திருக்கோவையாரிற் காணலாம். ஆகவே, திருவாசகத்தில் மணிவாசகரின் அன்பின் தோற்றமும் வளர்ச்சி நிலையும், திருக்கோவையாரில் அதன் முதிர்ச்சியையும் பூரணத்துவ நிலையையும் காணக் கூடியதாக இருக்கின்றது.

## எமது வேண்டுகோள்!

இந்து வாலிப சங்கத்தின் ஆறாவது ஆண்டு விழாவில் நிறைவேற்றிய தீர்மானத்திற்கிணங்க அகில இலங்கை இந்து வாலிபர் சங்கம் அமைக்கும் முயற்சியை சங்கம் தீவிரமாக மேற்கொண்டுவருகின்றது. அமைப்புக் குழுவினர் இதுவரையிலும் முப்பத்தைந்திற்கு மேற்பட்ட வாலிப சங்கங்களுடன் கடிதத் தொடர்பு கொண்டுள்ளனர். அதிகமான சங்கங்கள் அளவு கடந்த ஆதரவையும், சம்மதத்தையும் நல்கியுள்ளார்கள். மேலும் இலங்கையிலுள்ள பல வாலிப சங்கங்களுடன் தொடர்பு கொள்வதற்கு சரியான விலாசங்களை தெரிந்து கொள்ள முடியவில்லை. எனவே இந்த அரிய முயற்சிக்கு ஆதரவு நல்க சித்தம் கொண்டிருக்கும் சகல வாலிபர்களையும் உடனடியாக அமைப்புக் குழுவினருடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப் படுகின்றனர்.

விபரங்களுக்கு:<br>
விசாரணைக் குழு,<br>
அகில இலங்கை இந்து வாலிபர் சங்கம்,<br>
221, செட்டியார் தெரு,<br>
கொழும்பு-11.

# திருவெம்பாவை

[ஆ. கந்தையா எம். ஏ.]

பண்டைத் தமிழர்கள் உடலையும் உள்ளத்தையும் தூய்மைப் படுத்த நோன்புகள் பல இருந்தனர். அவ்வாறு தமிழகத்தில் நிலவி வந்த விரதங்களில் மார்கழி நோன்பு என்பதும் ஒன்று. மார்கழி நோன்பைப் பண்டைத் தமிழர் பண்பும் பயனும் கருதிப் போற்றி வந்தனர். ஆண்டாள் அருளிய திருப்பாவையாலும், மணிவாசகப் பெருமான் செய்த திருவெம்பாவையாலும் இவ்வுண்மை தெளிவாகின்றது.

பக்திப் பெருக்கைப் பரப்பும் பண்பு மார்கழித் திங்களுக்கு உண்டு. மணமாகாத மங்கையர் மார்கழி நோன்பிருந்து இறைவன் புகழ் பாடுவர்; திருவெம்பாவையையும், திருப்பாவையையும் பாடிப் பாடி அவன் புகழ் பேசுவர். நாடு வளங் குன்றிய போது மழை பொழிய வேண்டுவர் அம்மங்கையர்; ஆம், இம்மை மறுமைப் பயன் கருதித் தாம் விரும்பும் தலைவனைச் சேர மார்கழி முழுவதும் நோன்பிருப்பர். வைகறையில் எழுந்திருந்து அவர்கள் ஒருவரை ஒருவர் துயில் எழுப்பி மார்கழி நீராடும் வரலாற்றினை மணிவாசகப் பெருமான் பாடியருளிய திரு எம்பாவையில் காணலாம்.

திருவாசகத்தில் பெரும்பாலும் ஒவ்வொரு பகுதிக்கும் அப்பகுதியிலுள்ள பாட்டுக்களின் இறுதித் தொடரே தலைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது. திருவெம்பாவையிலுள்ள இருபது பாடல்களும் 'எம்பாவாய்' என்ற தொடரைக் கொண்டு முடிவதைக் காணலாம். எனவே இப்பகுதிக்குத் 'திருவெம்பாவை' என்ற தலைப்புக் கொடுக்கப் பெற்றுள்ளது. 'திரு' என்பது இந்நூல் இறைத்தொடர்புடைய அருள் நூலாதலின் மங்கல அடைமொழியாகச் சேர்க்கப்பட்டுள்ளது. மார்கழித் திங்களில் நீராடச் செல்லும் மணமாகாத மங்கையர் தாம்பூசித்து வரும் பாவையை முன்னிலைப்படுத்தித் தம் கருத்து நிறைவேறத் தம்முடைய வழிபடு கடவுளை வாழ்த்தி வணங்குவர். எனவே ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் 'எம்பாவாய்' என்று விளித்துப் பாடல்களைப் பாடி அழகு செய்கின்றார் மணிவாசகப் பெருமான்.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் இறைவனைக் காதலனாகக் கண்டு கசிந்துருகிப் பாடி அருள் பெற்றனர். இறைவனைக் காதலனாகக் கண்ட அவர்கள், தாம் காதலியராக மாறி நின்று ஊடியும், கூடியும் பக்திச் சுவை சொட்டச் சொட்டப் பாசுரங்களைப் பாடினார்கள். அவன் பெயர் கேட்டு ஊர்கேட்டு, உறைவிடம் கேட்டு, அன்னையையும் அப்பனையும் நீத்து, தன்னை மறந்து தலைவன் தாள் தலைப்பட்ட நங்கை ஒருத்தியை நாவுக்கரசர் 'முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்' என்ற தேவாரத்தில் அழகாகத் திட்டிக் காட்டுகின்றார். புகழ்ந்தும் இகழ்ந்தும் இறைவனைப் பாடிக் கசிந்து கண்ணீர் மல்கப் பாடிய மணிவாசகர், ஈற்றில் அன்பின் ஐந்திணைப் பேற்றைப் பயக்க வல்ல அகத்துறைப் பாடல்களைப் பாடுகின்றார். திருவெம்பாவை முதல் திருப்பள்ளியெழுச்சி முடியக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிப் பாடுவதைப் பார்க்கின்றோம்.

இம் மார்கழி நீராடலைத் 'தைந் நீராடுதல்'' என்று சங்க நூல்கள் எடுத்துரைக்கின்றன. சங்க காலப் பெண்கள் பாவை நோன்பு நோற்றனர். மணமாகாத மகளிர் மார்

கழித் திங்களில் பனி நீராடி நுண் மணலில் தமக்கு இட்டமான பாவையைச் செய்து, தம் கருத்து நிறைவேறவும், மழை பொழியவும் வேண்டிப் பாவை நோன்பு செய்தனர். இந்நோன்பு மார்கழித் திங்கள் முழுவதும் அனுட்டிக்கப்பட்டமையால் 'தைநீராடல்' என்றும் 'மார்கழி நீராடல்' என்றும்அழைக்கப்படுவதாயிற்று. சங்க காலத்தில் மதக் கொள்கையை அடிப்படையாக வையாமல் இந்நோன்பு வழக்கில் இருந்தது. ஆனால் காலஞ் செல்லச் செல்ல அது மதச் சார்புள்ளதாக மாறிற்று. இவ்வுண்மையை ஆண்டாள் கண்ணனை மணக்கக் கருதித் திருப்பாவையைப் பாடியருளியதைக் கொண்டும், மாணிக்கவாசகர் இறைவனை மணக்க எண்ணி திருஎம்பாவையைப் பாடியதைக் கொண்டும் நன்கு உணரலாம்.

திருப்பாவையும், திருவெம்பாவையும் வேறு வேறு தெய்வச் சார்பு உடையன. எது முந்தியது, எது பிந்தியது என்பது ஆராய்ச்சிக்குரியது. ஆனால் இருவரில் ஒருவர் மற்றவரின் பாடல்களைப் படித்த பின்பு தமது பாடல்களைப் பாடியருளினார் என்ற உண்மையைத் திருப்பாவை திருஎம்பாவைப் பாடல்களில் ஈடுபாடுகொள்வோர் இனிது காண்பர். ஆண்டாள் 'ஆழி மணிவண்ணா' என்னும் பாடலில் வருணனை வேண்டுகின்றார். மணிவாசகர் 'முன்னிக் கடலைச் சுருக்க' என்ற பாடலில் மழைக் கடவுளைத் துதிக்கின்றார். ஆண்டாள் அருளிய திருப்பாவை இயற்கை அழகு ஒன்றே உடையதாக அமைந்துள்ளது. ஆனால் அடிகளார் அருளிய திரு எம்பாவை அவ்வியற்கை அழகோடு செயற்கையழகும் உள்ளதாய்த் திகழ்கின்றது. இவ்வாறு பல வகைகளில் அவை ஒன்றியும், ஒன்றுமலும் இருக்கின்றன.

பண்டைக் காலச் சான்றோர் ஒருவர் திருவாசகத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் அதன் பொருள் புலப்படத் தலைக்குறிப்புக்கள் வரைந்துள்ளார். அவர் திருவெம்பாவைக்குச் ''சக்தியை வியந்தது'' என்ற தலைப்பைத் தந்துள்ளார். எனவே திருவெம்பாவை, திருப்பாவை என்பன தேவியின் விரதத்தை அன்று மணமாகாத கன்னியர் கொண்டாடிய முறையைக் குறிப்பன என்று கூறலாம். திருவெம்பாவையில் ''சக்திவழிபாடே'' கூறப்பட்டுள்ளது என்பது ''முன்னிக்கடலை'' என்ற பாடலில் பராசக்தியை உவமை கூறுதலால் தெரிய வருகின்றது. இன்னும், ''பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன், பாதத்திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்'' என்ற அடிகளாலும் இவ்வுண்மை மேலும் வலியுறுத்தப்படுகின்றது. அடிகள் சக்தியை 'எங்கள் பிராட்டி' எனவும், 'அவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே' எனவும் 'கொங்குண் கருங்குழலி நம்தம் கோதாட்டி' எனவும் இப்பகுதியில் பாராட்டிப் பாடியுள்ளார்.

மார்கழித் திங்களில் பத்து நாட்கள் திருவெம்பாவையைத் தவிர வேறு பன்னிரு திருமுறைகளுள் எப்பகுதியையும் ஓதக் கூடாது என்னும் கட்டுப்பாடு பல நூற்றுண்டுகளாக வழக்கிலிருந்தது. இதனைத் 'திருவெம்பாவைக் காப்பு' என்பர். சிவஞான சுவாமிகள் 'திருத்தொண்டர் திருநாமக்கோவை' என்னும் நூலைச் செய்து ஓதுமாறு பணித்த வரலாறு இப்பழைய வழக்கத்தை வலியுறுத்தும். விருப்பு வெறுப்பில்லாத இறைவனுக்குக் கூடத் திருவெம்பாவையில் நிறைந்த ஈடுபாடு உண்டு என்பதை அவன் வாய்ச்சொற்களைக் கொண்டே அறிய முடிகின்றது. கோவை பாடும்படி மணிவாசகரைப் பணித்தபோது 'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' என்றான் இறைவன். சிவபுராணம் பாடிய வாயால் திருச்சதகம் பாடிய

வாயால், நீத்தல் விண்ணப்பம் பாடிய வாயால் கோவை பாடுக என்று அவன் பணிக்கவில்லை. எனவே திருவெம்பாவையின் சிறப்பை இறைவனும் உணர்ந்து ஈடுபாடுகொண்ட பின்தான் 'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' என்று அருளிப்போந்தான்.

பண்டைத் தமிழ்ச் சான்றோர்களும், வேந்தர்களும் இப்பாவைப் பாட்டை பாடிப்பாடி மகிழ்ந்தனர்; ஈடுபாடு கொண்டு இன்பங் கண்டனர். அல்லாமலும் தமிழகத்தில் இருந்த சிவாலயங்கள் தோறும் மார்கழித் திங்கள் திருவாதிரை நாளில் திருவாதவூரடிகளுக்கு விழா எடுத்து வழிபட்டனர். இவ்விழாவில் திருவாதவூரடிகள் அருளிச் செய்த திரு எம்பாவையை ஓதி இன்பம் பெற்றனர். முதலாம் வீரராசேந்திரன் காலத்தில் திருக்கோயில்களில் திருவெம்பாவை ஓதும் வழக்கம் இருந்ததாகக் கல்வெட்டுகளால் அறியக் கிடக்கின்றது. வடக்கே திருவொற்றியூர் தொடக்கம், தெற்கே நாங்கினேரிவரை தமிழகம் முழுவதும் ஆங்காங்கே அமைந்து திகழ்ந்த திருக்கோயில்களில் மார்கழித் திங்கள் திருவாதிரை நாளில் திருவெம்பாவை ஓதப்பட்டது என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

தமிழகத்தில் நிலவிய இவ்வழக்குக் கடல் கடந்தும் சென்றது. பண்டைத் தமிழர்கள் கடல் கடந்து கடாரம், சாவகம், சாயம் போன்ற கீழ்கடல் நாடுகளுக்குச் சென்று வாணிபம் செய்து வந்தனர். அவ்வாறு சென்ற அவர்கள் சென்றவிடமெல்லாம் தமிழ்ப் பண்பையும்' தமிழ்நாட்டு ஒழுக்கங்களையும் விட்டு வந்தனர். இவ்வகையில் இத்திருவெம்பாவை "தமிழ் மந்திரம்" என்ற பெயரால் சயாம் நாட்டிற்குச் சென்றுள்ளது. மன்னனுக்கு முடிசூட்டும் காலத்தும், ஒருவகைத் திருவிழாத் தினத்தும் சயாம் மக்கள் திருவெம்பாவையை இன்றும் ஓதுகின்றனர். பாக்களின் ஈற்றில் 'ஏலோர் எம்பாவாய்' என்று வருதலைக் கண்ட சயாம் நாட்டினர் இதற்கு 'லோரி பாவாய்' என்று பெயரிட்டு அழைத்தும், திருக்கயிலாயக் கடைத்திறப்பு என்று பொருளுரைத்தும் வருகின்றனர். சயாம் நாட்டினர் திருவெம்பாவையை எவ்வாறு ஓதுகின்றார்கள்? முடிசூட்டு விழாவில் மன்னனை வணங்கி நின்று பிராமணன் ஒருவன் திருவெம்பாவையை இசையுடன் பாடுவான். திருவூசல் திருவிழாவில் 'லோரிபாவாய்' எனப்படும் திருவெம்பாவையை நால்வர் சேர்ந்து ஓதுவர். அப்போது ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் பிராமணர்கள் சங்குகளை முழங்குவர். இவ்வாறு தமிழகத்து வழக்குக் கடல் கடந்து சயாம் நாட்டிற்கும் சென்றுள்ளதை நாம் காண்கின்றோம்.

இனித் திருவெம்பாவையின் அமைப்பு முறையைப் பார்ப்பாம். சைவசித்தாந்த சாத்திர நுட்பங்களனைத்தையும் திருவெம்பாவையில் காணலாம். முப்பொருளுண்மை, கடவுளைப் பற்றிய கருத்துக்கள், ஐந்தொழில் விபரங்கள், இறைவனுக்கும் உயிர்கட்கும் உலகத்திற்குமுள்ள தொடர்பு, உயிர்களைப் பற்றிய விபரங்கள், மும்மலங்களின் இலக்கண வகை தொகை, மும்மலங்களை ஒழிக்கும் உபாயங்கள், சரியை முதலிய நான்கு வழிகளின் நுட்பம், பாச நீக்கம், சிவப்பேறு, இரண்டறக் கலத்தல் முதலிய பற்பல செம்பொருட்கள் திருவெம்பாவையில் பொதிந்துள்ளன.

முதற் பாசுரத்தின் முதலடி இறைவனை ''ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதி'' என்று புகழ்ந்து பேசுகின்றது. மண்மாகாத மங்கையர் விஷயத்

(தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க)

சென்ற இதழின் தொடர்ச்சி

# புலவர் உள்ளமும் வாழ்க்கையும்

[வித்துவான் க. கார்த்திகேசு, B. A. Dip-in-Ed.]

இப்படிப்பட்ட இன்ப நிலை கைகூடப் பெற்றவன் இடையிடையே தான் அடையும் இன்பத்தையும், மற்றவர்கள் உண்டு உடுத்து உறங்குவதையும் கண்ட பொழுதெல்லாம் ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்று நினைப்பதுண்டு. இப்படி விரும்புவதுடனமையாமல், அவர்கள் மட்டும் தான் பெற்ற இன்பத்தை நிகழப்பண்ணுவதற்குக் கருவியாக தன் தாய் மொழியை நன்கு பயிலுவதிலுங் கருத்தூன்றுவன். பல நாள் ஓயாதுகற்றுவரத் தன்னுள்ளத்தில் இன்பத் திரைகள் ஆர்த்து ஆர்த்து எழக் கண்டு ''கற்பனவுமினியமையும்'' என்று மணிவாசகப் பெருமான் கூறியதுபோல் தான் மீட்டும் மீட்டுங் கல்லாது தன் சுவையே ஏனை மக்களுக்குத் தோற்றுவதற்கு முயலுவன். இதை இளங்கோவடிகள், சேக்கிழார், கம்பர் முதலிய எந்தமிழ்ப் புலவர் வரலாற்றிடை வைத்துக் கண்டுகொள்க.

ஒழுக்கத்துடனறிவு முதிர்ந்தவர்களாகிய புலவர்கள் அழகல்லாதனவற்றை அழகு பெறச் செய்வதே தொழிலாகக் கொள்ளுவர். இப்படிப்பட்ட வேலை உலகில் ஒரு காலமும் ஒழியாது இருக்கும். நாளும் நாம் நறு நீரில் முழுகி உடலைத் தூயதாக்கினாலும், உடையை நன்றாக வெளுத்துடுத்தினாலும் அவை மீட்டும் அழுக்கேறப்பெறுகின்றன. இதுபோலவே மக்களுள்ளத்தில் நான்முகமாய் வந்து குப்பை கூழங்கள் குவிந்துகொண்டிருக்கும். இவற்றை அகற்றி உள்ளத்தில் உண்மை இன்பம் பிறப்பிப்பதே புலவர்களுடைய தொழிலாகும். புலவர்கள் நாவிலிருந்தெழும் பாட்டே மற்றைய மக்களைத் திருத்தும். தெய்வ ஒளி வீசிக்கொண்டிருக்கும் புலவருடைய உடம்பையும் அவருடைய செந்நாவிலிருந்தெழும் இன்னிசைப் பாட்டையும் கண்ணாற் பார்த்துக் காதாற் கேட்டவுடனே அவர்கள் புலவர்வயப்பட்டு நின்று ஓர் அதிசய நிலைமை பெற்று ''இப்படி ஒப்பதோர் அற்புதம் எங்குளதென்று'' வியந்து இன்பம் அடைவர். வெறும்புலமாய்க் கிடந்த இடத்தைப் பண்படுத்திப் பலருங் கண்டு மகிழ்தற்கு ஓர் பூந்தோட்டத்தை ஒருவன் அமைக்கும் பெற்றி போலப் புலவர்களும் மக்களுக்கிடையில் பொருளாசை முதலியவற்றால் எழும் வெகுளி முதலியவற்றை தம் இனிய பாட்டினால் தடுத்து இன்பம் வழங்கி அவர் வாழ்க்கையைப் பொலிவுற்றோங்கச் செய்வர்.

இதுகாலுஞ் சொல்லியவற்றுக்கு ஓர் எடுத்துக்காட்டாக ''செல்லி'' என்னும் ஆங்கிலப் புலவர் ''வானம் பாடி'' யைப் பற்றிப் பாடிய பாட்டில் இயைபுடையவற்றை மொழிபெயர்த்துத் தருகின்றேன். ஓர் சாயங்கால வேளையில் கதிரவன் பொன்னொளியில் தோய்ந்து ஓர் வானம்பாடியானது பாடிக்கொண்டே உயரப் பறந்துகொண்டும், உயரப் பறந்துகொண்டே பாடிக் கொண்டிருப்பதையும், அவ்வாங்கிலப் புலவர் கண்டார். வானம் பாடியின் இசைவெள்ளம் விண்ணும் மண்ணுந் தேக்கியது. இது புலவரைப் பரவசமாக்கிவிட்டது. இவ்வானம் பாடிப் புள் பாடுவது ஓர் புலவன் தன் நெஞ்சில் அறிவுச் சுடர் நிறையப் பெற்று உரையிளகி உணர்விளகி ஓர் பாட்டுப் பாடிக் கேட்டாரது அறிவை நல்வழியில்

திருப்புவதுக்கொக்கும் என்றுர். இதனல் புலவனுடைய உள்ளத்தின் பாங்கை நன்கு புலப்படுத்தினுர். மேலும் இவ்வானம்பாடிப் புள்ளுக்கு என்ன காட்சிகள் இத்தகைய களிப்பைக் கொடுப்பன என்று கேட்குமவர், நீல மலைகளோ, நிரம்ப அழிய வயல்களோ, நெடுந் திரைக் கடலோ, நீல வானே வேறெவர்க்குமில்லாது அதற்கே கிடைத்த இன்பமோ, அல்லது துன்பம் இன்னதென்று வானம்பாடி அறியாமையோ, என்று தான் கண்டு மகிழுங் காட்சிகளையே கூறுகின்றுர். இன்னும் அப்புலவர் வானம்பாடியிடம் இரந்து கேட்பதே மிகச் சிறந்த பகுதியாகும்.

வானம்பாடி தான் கண்ட இன்பத்தில் பாதியாவது தனக்கு நல்கி எப்படி அதன் பாட்டைத் தான் மன உருக்கத்தோடும் நின்று கேட்கிருரோ அப்படியே தானும் பாட உலகத்தவர் அங்ஙனங் கேட்க அருளவேண்டுமென்று கேட்கின்ருர்.

இதுகாறும் புலவன் ஒருவன் விண்ணும் மண்ணும் நிறைந்து விளங்கும் வியத்தகு தோற்றங்களைக் கண்டு தான் மகிழ்தலும் பாட்டுப்பாடி ஏனையோரை மகிழ்வித்தலுமாகிய தன்மைகளைக் கூறினேன். இனி மக்கள் உள்ளத்தே நிகழும் நல்ல எண்ணங்கள் தீய எண்ணங்களின் திறங்களை நன்கு அறிந்த புலவன் அவர்களிடை நல்லெண்ணங்களைத் தோற்றுவிக்கு மாறெங்ஙனமென்பதையும் ஒரு சிறிது கூறி இவ்வாராய்ச்சியை முடிப்போம்.

பல நற்குணங்களுக்கு இருப்பிடமாய் விளங்குபவர்கள் ஒரே வழி நிகழும் அழுக்காறு வெகுளி முதலிய குணங்களினுல் தம் நல்லுணர்வு மறைக்கப்பட, உற்றுர், உறவினர், நண்பர் முதலியோரைப் பிழைபட எண்ணி அவருக்குத் தீங்கு செய்ய முயலுதலும், பின் தம்முடைய பிழைக்கே குழைந்து ஆற்ருமை மிகுதலும் முதலியவற்றைப் பற்றிப் புலவர்கள் காவியங்களாவது நாடகங்களாவது இயற்றுவர். ஷேக்ஸ்பியர் எழுதிய ''லீயர் என்னும் அரசன்'' என்ற நாடகம் ஓர் சிறந்த உதாரணமாகும். லீயர் என்ற சிறந்த அரசர் தன் புதல்வியாகிய கோடீலியா மற்றைப் புதல்விமாரைப் போல் நேய மொழிகளைக் கூறவில்லையென்று கண்டவுடன் அடங்காக் கோபங்கொண்டு தன் நாட்டை மூத்த இரு பெண்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்து, உண்மை அன்புடைய இளைய புதல்வியைத் தன் புதல்வியல்லவென்று வெறுத்து ஒதுக்கினுர். ஒதுக்கிய இவர் பின் மூத்த பெண்களால் தள்ளப்பட்டு, மாளிகையில் பஞ்சணை மெத்தையிற் பள்ளிகொண்டு வந்த இவர், துன்பம் இன்னதென்பதையறியாத அரச வாழ்க்கையில் வாழ்ந்த இவ்வரசர், நள்ளிருளில் வெட்ட வெளியில் புயற்காற்றடிக்க இப்போது நின்று வருந்தவும், தன் இளைய புதல்வியின் மெய்யன்பை உள்ளவும், தன்னைப்போல் வீடுவாசலற்ற ஏழைகளிப்படியே வருந்துவரே, இவர்களைத் தான் அரசனுக இருந்த பொழுது கவனிக்கவில்லையேயென்று அல்லலுழப்பதையும் படிக்குந்தோறும் அல்லது நாடகமாந்தர் நடித்துக்காட்டக் காணுந்தோறும் கல்நெஞ்சமும் கசியும். இங்ஙனமே புலவர்கள் தங்கள் பாட்டுக்களினுல், மக்கள், தங்களை அறியாமலே, கெட்டவர்களை வெறுக்கவும், நல்லவர்களை விரும்பவும்பழகச் செய்கிருர்கள்.

புலவர்கள் இம்மண்ணுலகில் வாழ்வதை நாம் எண்ணிப் பார்ப்போமேயானுல் அவர் வாழ்க்கை ஓர் இசைவல்லான் எழுப்பிக்கொண்டிருக்கும் ஓர் வீணையை ஒக்கும். அவருடைய உடம்பு வீணைக்கும், கண் முதலிய ஐம்

பொறிகள் வீணையின் நரம்புக்கும், மாலைப் பொழுதில் தோற்றும் நிலா, மெல்லென வீசும் தென்றல், முதலியன வீணையின் நரம்பைத் தெறிக்கும் விரல்களாகவும். புலவர்களடையும் இன்பம் வீணையின் இனிய ஓசைக்கும் ஒப்பிடலாம்.

புலவர்களே மக்களுக்குக் கடவுளை முதன் முதல் ஆக்கிக்கொடுத்தவர்கள். அவர்களே மனிதர்களையும் கடவுளையும் இணைத்து விடுபவர்கள். திருமாலானவர் தன் மணிவாயில் ஓர் வேய்ங்குழலை வைத்து இடையறாது எழுப்புங் கானத்தைக் கேட்பதற்கு ஏற்ற உள்ளத்துடனும் பணிவுடனும் வாருங்கள் என்று ஏனையோரை முதல் அழைத்தவர்கள் புலவர்களே. இன்னும் சிவன் பேரானந்தத்தினால் கூத்தாடிக்கொண்டு அளவிறந்த கீதங்களைப் பாடுவதைப் பார்ப்பதற்கு வந்து முந்துமினே என்று சொன்னதும் புலவர்களே.

---

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

திற்கு முன்னர் எழுந்து ஒருவரையொருவர் துயில் எழுப்பி நீராடுவதற்கு அழைக்கும் காட்சியை முதல் எட்டுப் பாடல்களில் அழகாகப் படம் பிடித்துக் காட்டுகின்றார் மணிவாசகப் பெருமான். ஒன்பதாம் பாசுரத்தில் ''முன்னைப் பழம் பொருளே பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே'' என்னும் தொடர் மொழியால் பல சைவசித்தாந்தக் கருத்துக்களை மணிவாசகப் பெருமான் புலப்படுத்தியுள்ளார். சிவபெருமானுடைய தொன்மை நிலை, புத்துணர்விற் கெளிவருநிலை, சொரூபலக்கணம், தடைத்தலக்கணம் முதலிய பல நுட்பங்களைக் குறித்த தொடர் விளக்குகின்றது. இன்னும் ஏனைய ஒவ்வொரு பாடலிலும் பற்பல நுட்பங்கள் உள்ளன. பதின்மூன்றும் பாசுரத்தில் நீராடும் மடு சிவனுக்கும் உமைக்கும் ஒப்பிடப்பட்டுள்ளது. பதினாறும் பாடலில் உமையம்மையின் பாதாதி கேச வர்ணனையுள் மழை பொழியும் வான் அழகாகப் படம் பிடித்துக் காட்டப் பெற்றுள்ளது. அடுத்த பாசுரத்தில் இறைவன் அடியார்க்கு எளியவனாக அருள் செய்யும் சிறப்பும், அதற்கடுத்த பாடலில் அண்ணாமலையான் ஆணாகிப் பெண்ணாகி வேறாகி உடனாகி உயிர்கட்கு அருள் வழங்கும் நுட்பமும் குறிக்கப்படுகின்றது. இறுதிப் பாட்டில் இந்நீராட்டு 'மார்கழி நீராட்டு' என்ற கருத்துத் தெளிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு திருவெம்பாவைப் பாடல்கள் பலவற்றில் இறைவன் புகழைப் பாடிப் பரவுகின்றார் மணிவாசகப் பெருமான்.

மணிவாசகர் ஆனந்த பரவச நிலையில் எற்புத் தொளை தோறும் நெக்கு நெக்குருக உள்ளம் கசிந்து கண்ணீர் வெள்ளம் பாயத் திருவெம்பாவையைப் பாடினார். பரஞ்சோதி முனிவர் ''அழுது அடைந்த அன்பன்'' எனப் புகழ்ந்து பேசுகின்றார். திருவாசகத்தைப் படிக்கும்போது கல்நெஞ்சம் கரைந்து விடுகின்றது. ''திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்'' என்னும் முதுமொழியும் இவ்வுண்மையை உணர்த்தும். எனவே மணிவாசகப் பெருமான் கசிந்துருகிப் பாடிய திருவெம்பாவையை நாம் கலந்து பாடுவோமானால் நற்கருப்பஞ்சாற்றில் தேன் கலந்து, பால் கலந்து, தெழுந்தீஞ்சுவை கலந்து, ஊன் கலந்து, உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கக் காணலாம்.

# REAL EDUCATION

Sri Swami Sivananda Saraswati,

OUR present day schools and colleges give a secular education. There is neither ethical discipline nor spiritual instruction. The students have no high spiritual ideals of life. They learn something in order to eke out their livelihood. This is indeed very sad.

Owing to the influence of dark, antagonistic, materialistic forces most of the students of the present day turn out to be spiritual bankrupts in the end. There is no moral culture in them. They have no understanding of the principles of Brahmacharya and right living. Hence they suffer much when they come out to face the battle of life.

Our students have become creatures of vile imitation. They have imitated the West in smoking, in the wearing of trousers, hats, boots, collars, and neck-ties, in hair-dressing etc. But they have not imbibed the various qualities, such as self-sacrifice, patriotism, spirit of service, punctuality, perseverance, tolerance, and erudition that are admirable characteristic features of the Westerner.

Taking a degree in the university is not real culture. What is wanted is moral culture, ethical culture, knowledge of the self, refinement of our human nature, good behaviour, refined manners, discipline of the 'indriyas', control of the mind and cultivation of divine virtues. This rare discipline cannot be had in the present day universities .A drastic change in the curriculum of the universities is needed. Books that are best calculated to give moral culture should be introduced. Students should have proper ethical training. Then only can a university turn out students with a proper education and culture.

The students of to-day are the future leaders of the country. They are the wealth of the state. They are the most valuable assets of the nation. They must be allowed to develop their latent or dormant faculties through proper education and culture. If they are endowed with sterling qualities of head and heart, they will shine as luminaries in this world.

Spiritual culture is a *sine qua non* of national regeneration. The goal of life is self-realization. Spiritual culture alone can develop the will-force and make people unselfish fearless and courageous, and remove the lower 'vrittis' of the mind. Only those who are unselfish can really serve the country, work in the terms of unity and have real cosmic love for all.

Education should teach pupils to love God and every creature of the world. Education should instruct the student to be truthful, moral, fearless, humble and merciful. Education should teach students to practise right conduct, right thinking, right living, right action and self-sacrifice and to attain the knowledge of the self.

Education aims at cultivating good ideas and expressing them in a beautiful, intelligible manner after clarifying them with a scientific or mathematical accuracy. The real work of all universities must be to unite man with man. The main purpose of education must be to make a real man with all divine attributes.

Education must be best calculated to promote plain living and high thinking. Each student must be taught that his first and foremost duty is to serve humanity and cultivate universal brotherhood.

Educate your eyes to see God in all faces, to behold the unity of self in all beings. Educate your ears to hear the lofty teachings of the scriptures and hymns and prayers. Educate your tongue to sing the praise of the Lord and to utter pleasant, loving and truthful words. Educate your hands to serve the needy, help the poor, nurse the sick and to do charity. Educate your mind to be always cheerful and calm and to think of the immortal soul. This is indeed real education.

Dear Prem! Study diligently. Apply yourself tenaciously. Behave politely. Obey implicitly. Pray whole-heartedly. Speak sweetly. Stick resolutely to the Truth. Think usefully. Act righteously. Endure courageously. Persevere patiently. March boldly. God be with you! Peace be with you!

May you all be endowed with a true knowledge of real education! May the universities, schools, and colleges become dynamic centres of real education! May the heads of educational institutions possess a right understanding and true knowledge to guide students in the right path! May you all enjoy the supreme peace of the Eternal!

## திருக்கேதீச்சரம் திருவெம்பாவை விழாவும் சிரமதானமும்

திருக்கேதீச்சரம் திருவெம்பாவை விழாவில் தினமும் விடியற் காலை மூன்று மணிக்கு நித்திரை விட்டெழுந்து, நீராடி நியமங்கள் முடித்து திருக்கோவிலுக்குச் சென்று ஆடவர்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரும் பத்திமயமாக வழிபடும் காட்சியும், அங்கே நடைபெறும் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவைப் பூசையும், மாணிக்கவாசக சுவாமிகள் திருவிழாவும், அங்கே ஓதப் பெறும் திருவாசகமும் எல்லோர் மனதையுமுருக்கி கண்ணீர் பெருக்கிய இன்ப நிலை சொல்லால், எழுத்தால் அளவிடமுடியாத ஆனந்தமாகும்.

இவ்வருடம் எல்லோரும் கண்ட போற்றத்தக்க செயல் ஒன்று சிரமதானம் ஆகும். கொழும்பு இந்து வாலிப சங்கத்தார் பல இடங்களுக்குமறிவித்து தொண்டர்கள் பலரை உடன் அழைத்து வந்து நியமமாகத் தரிசனஞ் செய்து கொண்டு ஒழிந்த நேரம் முழுவதும் ஆலயத்தின் அணிமையிலும், பாலாவித்தீர்த்தக் கரையிலும், மற்றுமிடங்களிலும் புல் பூண்டு முட்செடிகள், பற்றைகள் இவைகளையெல்லாம் பிடுங்கி தூய்மையாக்கிய தொண்டு நூற்றுக்கு மேற்பட்ட அன்பர்கள் செய்தமையைப் பார்த்தவர்களெல்லோரும் பாராட்டுவாராயினர். இத்தொண்டு செய்தவர்களுக்கு தாமும் உறுதுணையாய் நின்று வேண்டிய வசதிகளெல்லாம் செய்து கொடுத்து வழிகாட்டியவர் திருப்பணிச்சபை முதல்வர் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள். எங்கள் சமயகுரவருள் ஒருவராகிய திருநாவுக்கரசு நாயனார் செய்து காட்டிய திருத்தொண்டாகும் இது என்று நினைக்குந் தோறும் மனதில் எழுகின்ற இன்ப உவகையை வெளிப்படுத்தாமல் இருக்க இயலாமையால் இதனை வெளியிடுகின்றேன்.

கௌரியம்மா சமேத கேதீஸ்வர நாதன் திருவருளால் வாழ்க திருத்தொண்டு? வாழ்க தொண்டர்கள்! —ச. குமாரசுவாமிப் புலவர்

# மகா சிவராத்திரி விரத நாள் நிர்ணயம்

## மாசி மீ 29-ம் உ (12—3—64)

(ஆ. கந்தையா எம். ஏ.)

சோபகிருது வருடத்தில் வரும் சைவ விரதங்களைக் குறிக்கும் நாட்கள் இந்திய, இலங்கைப் பஞ்சாங்கங்களில் ஒன்றுக்கொன்று மாறுபாடாய் இருப்பதைக் கண்டு, அவற்றைப்பற்றிய சரியான கருத்தைச் சைவ உலகுக்கு அறிவுறுத்த விரும்பி, ''நவராத்திரி — சிவராத்திரி விரத நிர்ணயம்'', ''சிவராத்திரி மாச நிர்ணயம்'' என்னும் இரு பிரசுரங்களைத் திருக்கேதீச்சர சிவானந்த குருகுலத்தினர் வெளியிட்டுள்ளனர். அவ்வெளியீடுகளின்படி மகா சிவராத்திரி இவ்வாண்டு மாசி மாதம் 29-ம் நாள் (12—3—64) வியாழக்கிழமை அனுட்டிக்கப்படல் வேண்டும்.

சிவபெருமானது திருமுகங்களிலிருந்து தோன்றிய சிவாகமங்கள், நித்தியம், நைமித்தியம், காமியம் என்ற பூசைகளையும் அவற்றை அனுட்டிக்க வேண்டிய முறைகளையும் கூறுகின்றன. இவ்வாகமங்களில் கூறப்பட்ட முறைக்கு மாறுதலாகச் செய்வது தீங்கு என்றும், தவறாக அனுட்டித்தால் அவற்றிற்குப் பிராயச்சித்தமும் அவ்வாகமங்களிலேயே கூறப்பட்டிருக்கிறது. எனவே அகில உலகத்திலும் சைவப் பெருமக்களால் அனுட்டிக்கப்பட்டுவரும் புண்ணிய நாளை நிர்ணயித்து, சைவாகம சாத்திரங்களைக் கற்றுத் துறைபோகிய சைவப்பேரறிஞர்களாகிய அச்சுவேலி சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக் குருக்கள், கண்டனூர் சிவாதி அரு. இராமநாதக் குருக்கள், தருமபுரம்சிவாகம வித்துவான் சிவஸ்ரீ எஸ். சுவாமிநாத சிவாசாரியார் திருவாவடுதுறை சிவஸ்ரீ. க. சுவாமிநாத சிவாசாரியார் ஆகியோர்களது தீர்க்கமான முடிவைத் திரட்டிச் சிவானந்த குருகுல வெளியீடுகளாக வெளியிட்டமை மிகவும் வரவேற்க வேண்டியதொன்றாகும்.

சிவாகமங்களில் சிற்சில விரதபூசை முறைகளைச் சாந்திரமான மாசத்திலும் வேறுசில விரத பூசைகளைச் சௌரமான மாசத்திலும் அனுட்டிக்க வேண்டுமென விளக்கப்பட்டிருக்கிறது. அதாவது விநாயக சதுர்த்தி, நவராத்திரி, கந்தஷஷ்டி இவைகள் சாந்திர மாசத்திலும் சிவராத்திரி, மகோற்சவ தீர்த்தம் முதலியவைகள் சௌர மாசத்திலும் அனுஷ்டிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

''ஸ்தாபனம், சம்புரோக்ஷணம், தீட்சை, சிவராத்திரி, சிவோத்சவம் என்பவை சௌர மாசத்திற் செய்யத்தக்கன. சாந்திரமானம் தள்ளத்தக்கது'' என வீராகமமும் சித்தாந்த சேகரமும் விதிக்கின்றன. ''மகாபூசை முதலியவற்றைச் சௌர மாசத் ற் செய்க; கும்ப மாசத்துக் கிருஷ்ண சதுர்த்தசியில் சிவராத்திரி விரதத்தை அனுட்டிக்க'' என பீமசங்கிதை கூறுகின்றது. ''சூரியன் கும்பராசியில் எப்

269 | Feel64

பொழுது செல்கிருேனே அதுதானே மாகமாசமாகும்; அம் மாசத்தில் வரும் கிருஷ்ண சதுர்த்தசி மகாநிசி என்று சொல்லப்படும். அதில் சிவனைப் பூசிக்க'' என்று சூக்ஷ்மாகமம் கூறுகின்றது. கும்ப மாசத்தில் கிருஷ்ணபட்ச சதுர்த்தசியில் சிவபிரானைப் பூசித்து சிவராத்திரி விரதம் அனுட்டிக்கப்படவேண்டும்'' என்று சிரஞகமம் கூறுகின்றது. இத்தியாதி பிரமாணங்களினலே சிவராத்திரி விரதம் பூசை உற்சவம் ஆகியன சௌர மாதத்திலேயே செய்தல் வேண்டும் என்பதும் சாந்திர பட்சத்தில் அனுட்டித்தல் கூடாதென்பதும் நிச்சயமாகின்றன.

சிவானந்த குருகுலத்தின் மூன்றுவது வெளியீட்டின் முன்னுரையில் பின்வருமாறு சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ''சிவராத்திரி விரதம் அகில உலகத்துச் சைவப் பெருமக்களால் சிரத்தையோடு கைக்கொள்ளப்படுவது மட்டுமன்றி நமது திருக்கேதீச்சரத்தில் அகில இலங்கைச் சைவ நன்மக்களனைவரும் சேர்ந்து பக்தி சிரத்தையோடு கொண்டாடப்படும் சீரிய விரதமுமாதலால், இச்சிவராத்திரி விரத நாள் எது என்பதை ஆகமப் பிரமாணங்களுடன் எடுத்துக் காட்டி, சிவானந்த குருகுலத்தின் இரண்டாவது வெளியீட்டினைத் தொடர்ந்து மூன்றுவது வெளியீட்டினைச் சைவ உலகத்திற்கு அளிக்கத் தீர்மானித்தோம்''.

இவ்வெளியீடுகளில் அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் சிவாகம வித்துவான் கண்டனூர் சிவஸ்ரீ அரு. இராமநாதக் குருக்கள், தருமபுரம், திருவாவடுதுறை சிவாகம வித்துவான் முதலியவர்களின் விரிவான கருத்துக்கள் இருக்கின்றன.

இவ்வகையில் இந்தியாவிலுள்ள பிரதான ஆதீனங்களும் அவர்களின் மேற்பார்வையிலுள்ள நூற்றுக்கணக்கான பாடல்பெற்ற ஆலயங்களும் ஆகமப் பிரமாணங்களைக் கருத்துட் கொண்டு கைக்கொள்ளும். இவ்வாண்டு சிவராத்திரி விரத நாளை, அதாவது மாசிமாதம் 29-ம் திகதி (12—3—64), இலங்கையிலுள்ள ஆலயங்களும் சைவப் பெருமக்களும் கைக்கொள்ளுவார்களென எதிர்பார்க்கிறேம்.

---

குறிப்பு: இவ்விளக்கங்களைப் படித்துத் தெளிய விரும்புவோர் 50 சத முத்திரையை அல்லது த்பாற் கட்டளையை ''சிவானந்த குருகுலம், திருக்கேதீச்சரம்'' என்னும் முகவரிக்கு அனுப்பி இப் பிரசுரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

---

## வருந்துகின்றேம்

இந்து வாலிப சங்கத்தின் முன்னை நாள் காரியதரிசியும் தற்போதைய கூட்டுப்பிரார்த்தனைச்சபைத் தலைவருமாகிய திரு. ம. நமசிவாயம் அவர்களின் அன்னையார் சிவபதமடைந்ததையிட்டு இந்து வாலிபர் சங்கம் ஆழ்ந்த கவலையை தெரிவிக்கின்றது.

J/Valvai Mahalir Maha Vidyalayam
VALVETTITHURAI.

SERVICE IS OUR BUSINESS

*Always visit us*

*for your requirements in textiles*

NAGINDAS

137, Main Street, COLOMBO.

*T'phone:* 2 1 3 2

FOR

QUALITY

TEXTILES

MOTIRAM & SONS

175, MAIN STREET,

COLOMBO.

T'phone : 7 5 4 9

*The Young Hindu*
*Bilingual Monthly*

*Registered as newspaper in Ceylon*
*Regd. No. T 49*

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
ONE DOLLAR
DOLLAR BRAND

உங்கள் வீட்டுப் பாவனைக்கு நீங்கள்

# டொலர்

இலச்சினை பொறித்த அலுமினியப்
பாத்திரங்களைத் தெரிவு செய்தால்,

* உறுதிக்கும்
* உழைப்புக்கும்
* அழகுக்கும்

உத்திரவாதமுள்ளவற்றை வாங்குகிறீர்கள் என்று பொருள்!
அது மட்டுமல்ல!

இணையற்ற எம் நாட்டுத் தொழிலுக்குத் துணைசெய்து
அதை வளர்த்தவரும் ஆவீர்!

ஏகவிற்பனையாளர்கள் :

## டொலர் கார்ப்பொரேஷன்,

**14, டாம் வீதி, கொழும்பு-12.**

தொழில் நிலையம்: மாவிட்டபுரம். போன்: 6910

Published by the Young Men's Hindu Association 221, Sea Street, Colombo-11. and Printed at the Sutantiran Press, 194 A Bandaranaike Mawatte, Colombo 12-.